# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1988 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1988, திசெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30      தபாற் செலவு : சதம் 75

# 1988 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ--ஓ. 64/87

## ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தற்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

220 ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும், ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தற்) சட்டத்தின் 11 ஆம் பிரிவானது, அப்பிரிவில், "பணிப்பாளர்" என்னும் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"'பணிப்பாளர்' என்பது போதனா வைத்தியசாலைகள் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;".

திருத்தமானது கடந்த காலத்தையும் உள்ளடக்கிப் பயனுறுதல்.

3. (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், 1985 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும், இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரும் போதனா வைத்தியசாலைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் புரியப்பட்ட செயல் எதுவும் அத்தகைய பணிப்பாளர் தலைமையதிபதி முதன்மைச் சட்டவாக்கத்தினால் அத்தகைய செயலைச் செய்வதற்குத் தத்துவமளிக்கப்பட்டிருக்கவில்லை என்ற நிகழ்வின் காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாக இருந்திருப்பதாகவோ இருப்பதாகவோ கருதப்படுதல் ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.